# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2022.11.04 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல்

**குத்தகை உடன்படிக்கையொன்றின்கீழ் குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் தொடர்பான நடவடிக்கைமுறைக்காக ஏற்பாடு செய்வதற்கும், குத்தகை வாடகைகள், சேவை விதிப்பனவுகள் மற்றும் ஒழித்துக் கட்டப்பட்ட சேதவீடுகளின் நிலுவைகளை அறவிடுவதனை ஒழுங்குபடுத்துவதற்கும், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 70.00** **தபாற் செலவு : ரூபா 35.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல்

*ச.வ.- ஓ. 66/2021*

**குத்தகை உடன்படிக்கையொன்றின்கீழ் குத்தகைக்குக் கொடுக் கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் தொடர் பான நடவடிக்கைமுறைக்காக ஏற்பாடுசெய்வதற்கும்; குத்தகை வாடகைகள், சேவை விதிப்பனவுகள் மற்றும் ஒழித்துக்கட்டப்பட்ட சேதவீடுகளின் நிலுவைகளை அறவிடுவதனை ஒழுங்குபடுத்துவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமான தொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1**. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின்          ஆம் இலக்க, குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

### பாகம் I

### வழக்குத் தொடுத்தல்

குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறு வதற்குக் குத்தகை கொடுநரினா லான வழக்கு

**2**. (1) எவையேனும் வளவுகள் குத்தகைகொடுநரொருவரினால் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய குத்தகை கொடுநர், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய வளவுகளின் உடைமையை மீளப்பெறுவதற்கான வழக்கொன்றை, எந்த இடப்பிரதேச எல்லைகளினுள்-

(அ) குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகள் அமைந்துள் ளனவோ;

(ஆ) குத்தகைபெறுநர் வதிகின்றாரோ;

(இ) வழக்குக் காரணம் எழுகின்றதோ; அல்லது

(ஈ) வலுவுறுத்தப்படுவதற்கு நாடப்பட்ட குத்தகை உடன்படிக்கை செய்யப்பட்டதோ,

அந்த இடப்பிரதேச எல்லைகளின்மீது நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிமன்றத்தில் தொடுக்கலாம்.

(2) குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுவதற்காக அல்லது 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிவாரணத்துக்காக, ஒரு குத்தகை உடன்படிக்கை என்றவகையாக அத்தகைய வளவுகள் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் குத்தகைகொடுநரொருவரினால் வழக்கொன்று தொடுக்கப்படுதலாகாது.

வழக்குத் தொடுப்பதற்கான ஏதுக்கள்

**3.** குத்தகைபெறுநர்–

(அ) குத்தகை உடன்படிக்கைக் காலப்பகுதி முடிவுறுவதன் மீது; அல்லது

(ஆ) குத்தகைகொடுநர் குத்தகை உடன்படிக்கையின் முடிவுறுத்துகைபற்றிய அறிவித்தலொன்றை வழங்கியுள்ள விடத்து, சொல்லப்பட்ட உடன்படிக்கையில் தரப்பட்டுள்ள நியதிகள், நிபந்தனைகள், பொருத்தனைகள், கடப்பாடுகள் அல்லது கடமைகளுள் எவையும் குத்தகைபெறுநரினால் மீறப்பட்டமை காரணமாகக் குத்தகை உடன்படிக்கைக் காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர் அக்குத்தகை உடன்படிக்கை முடிவுறுத்தப்படுவதன் மேல்,

வளவுகளை விட்டுநீங்குவதற்கு மறுக்கின்றவிடத்து அல்லது தவறுகின்றவிடத்து அல்லது அசட்டைசெய்கின்றவிடத்து, குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுவதற்கு இச்சட்டத்தின்கீழான வழக்கொன்று குத்தகைகொடுநரினால் தொடுக்கப்படலாம்.

## குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல்

கோப்பிடப்பட வேண்டிய ஆவணங்கள்

**4.** (1) (இதனகத்துப்பின்னர், ''வழக்காளி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) குத்தகைகொடுநர், குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையிற் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஒரு பிராதை முன்வைப்பதன்மூலம் வழக்கொன்றைத் தொடுத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பிராதுடன் பின்வருவனவற்றைக் கோப்பிடுதலும் வேண்டும்:-

(அ) (இதனகத்துப்பின்னர், ''வளவுகள்'' எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) வழக்கின் விடயப்பொருளாகவுள்ளதும் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டதுமான வளவுகளின் உடைமை, (இதனகத்துப்பின்னர், ''எதிராளி'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) குத்தகைபெறுநரிடமிருந்து வழக்காளிக்குச் சட்டமுறையாக உரியதாகவுள்ளதென்ற பொருள்பட்டவொரு சத்தியக்கடுதாசி;

(ஆ) நைசைத் தீர்வைக்காகவும் அதன் சேர்ப்பிப்புக்காகவும், சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக ஏற்புடையற்பாலனவான முத்திரைகளுடன் சேர்த்து ஒரு வரைவு நைசைத் தீர்வை; அத்துடன்

(இ) ஒன்றுக்கு மேற்பட்ட எதிராளிகள் இருப்பின், வழக்கிலுள்ள எதிராளிகளின் எண்ணிக்கைக்குச் சமமானவாறாக, குத்தகைகொடுநர் நம்பியிருக்கும் ஏதேனும் ஆவணத்துடன் சேர்த்து, பிராதின், சத்தியக்கடுதாசியின் மற்றும் குத்தகை உடன்படிக்கையின் அத்தகைய எண்ணிக்கையினவான பிரதிகள்.

(2) (அ) ஒராம் உட்பிரிவின்கீழ் வழக்காளியினால் கோப்பிடப்பட வேண்டிய சத்தியக்கடுதாசி, வழக்காளியினாலேயே அல்லது வழக்காளியின் சார்பில் அத்தகைய சத்தியக்கடுதாசியைச் செய்வதற்குச் சட்டத்தினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) வழக்கானது 3 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதுவின்மீது வழக்காளியினால் தொடுக்கப்படின், வழக்காளி அத்தகைய நிகழ்வுகளை வழக்குரைத்தலும்

எதிராளியினால் புரியப்பட்ட மீறுகையை முதற்றோற்றவளவில் நிலைநாட்டுதலும் மற்றும் வெள்ளெனவான முடிவுறுத்துகைபற்றிய எண்பிப்பைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில், நீதிமன்றமானது, நைசைத் தீர்வையை வழங்குவதற்காக, வழக்குத் தொடுக்கப்பட்டதிலிருந்து ஏழு நாட்களினுள் அதனை ஆதாரப் படுத்துவதற்கு வழக்காளிக்கு அனுமதியளித்தல் வேண்டும்.

*நீதிமன்றத்தினால் நைசைத் தீர்வை பதியப்படுதல்*

**5**. (1) நான்காம் பிரிவின் நியதிகளின்படி நைசைத் தீர்வையை வழங்குவதற்காக வழக்கானது நீதிமன்றத்தில் ஆதாரப்படுத்தப் படும்போது,-

(அ) காண்பிக்கப்பட்ட குத்தகை உடன்படிக்கை-

(i) சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு முறையாக நிறைவேற்றப்பட்டு உரியமுறையில் முத்திரையிடப்படுகின்றதெனவும்; அத்துடன்

(ii) குத்தகை உடன்படிக்கையிலான ஏதேனும் மாற்றம், அழிப்பு அல்லது இடைச்செருகுகை, விடயத்துக்கேற்ப, பிரசித்த நொத்தாரிசுவினாலான அத்தாட்சிப்படுத்துகையில் குறிப்பிடப் பட்டவாறு நிறைவேற்றுகின்ற திறத்தவர்களினால் கையொப்பமிடப்படுமுன்னர் செய்யப் பட்டிருந்தாலொழிய, சொல்லப்பட்ட மாற்றம், அழிப்பு அல்லது இடைச்செருகுகை காரணமாகச் சந்தேகத்துக்கு உட்பட்டதல்லதெனவும்; அத்துடன்

(ஆ) கோப்பிடப்பட்ட சத்தியக்கடுதாசியின் உள்ளீடுகள் வழக்காளி தரப்பிலான வழக்கை முதற்றோற்றவளவில் எண்பிப்பதற்குத் திருப்தியானவையெனவும்,

நீதிமன்றத்துக்குத் தோன்றினால், நீதிமன்றமானது, (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட நிவாரணங்களுள் எவற்றுடனும்

சேர்த்து, பிராதில் விவரிக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுவதற்கு முதலாம் அட்டவணையிற்றரப்பட்டுள்ள படிவத்தில் நைசைத் தீர்வையொன்றைப் பதிதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நிவாரணம் பின்வருமாறாதல் வேண்டும்:-

(அ) குத்தகை வாடகைகளின் நிலுவைகள்;

(ஆ) வழக்காளிக்கு வளவின் வெற்றுடைமை மீள அளிக்கப்படும்வரை சேவை விதிப்பனவுகள் எவையேனுமிருப்பின்;

(இ) குத்தகை உடன்படிக்கை முடிவுறுவதிலிருந்து அல்லது குத்தகை உடன்படிக்கையின் முடிவுறுத்துகை பயனுறும் தேதியிலிருந்து வளவின் வெற்றுடைமை வழக்காளிக்கு மீள அளிக்கப்படும் தேதிவரை ஒழித்துக்கட்டப்பட்ட சேதவீடுகள் எவையேனுமிருப்பின்;

(ஈ) சட்டப்படியான வட்டிவீதத்தில் குத்தகை வாடகைகள், சேவை விதிப்பனவுகள் மற்றும் ஒழித்துக்கட்டப்பட்ட சேதவீடுகள் என்பவற்றின் நிலுவைகளின்மீதான வட்டி; அல்லது

(உ) நீதிமன்றம் தகுதியானவையெனக் கருதக்கூடியவாறாக வழக்காளியினால் இறைஞ்சிக்கேட்கப்பட்ட அத்தகைய வேறு நிவாரணங்களுடன் சேர்த்து நீதிமன்றம் அனுமதிக்கக்கூடியவாறான அத்தகைய செலவுதொகைகள்.

ஒழித்துக் கட்டப்பட்ட சேதவீடுகள்

**6**. (1) நீதிமன்றமானது, 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்படவேண்டிய ஒழித்துக்கட்டப்பட்ட சேதவீடுகளைத் தீர்மானிக்கும்போது, அத்தகைய ஒழித்துக்கட்டப்பட்ட சேதவீடுகளுக்கு விஞ்சுதலான ஏதேனும் பணத்தொகை குத்தகை உடன்படிக்கையில் திறத்தவர்களினால் உடன்பட்டுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், குத்தகை உடன்படிக்கையில் உடன்பட்டுக்கொள்

ளப்பட்ட குத்தகை வாடகையின் இருமடங்குகளுக்கு விஞ்சுதலான ஏதேனும் பணத்தொகையை நீதிமன்றம் அளித்தலாகாது.

(2) 3 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட வழக்கின் ஏதுக்களுக்காகக் குத்தகை உடன்படிக்கையில் செலுத்தப்படற்பாலனவான ஒழித்துக் கட்டப்பட்ட சேதவீடுகள்பற்றித் திறத்தவர்கள் உடன்பட்டுக்கொள்ளா திருக்குமிடத்து, அளிக்கப்படக்கூடிய ஒழித்துக்கட்டப்பட்ட சேதவீடு கள், குத்தகை உடன்படிக்கையில் திறத்தவர்களினால் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட குத்தகை வாடகையின் பணத்தொகையாதல் வேண்டும்.

*சேவை விதிப்பனவைக் கொடுப்பனவு செய்தல்*

**7**. ஒன்றில் வழக்காளிக்கு நேரடியாக அல்லது வழக்காளியின் சார்பில் வேறோர் ஆளுக்குக் குத்தகை உடன்படிக்கையிலுள்ள அத்தகைய சேவை விதிப்பனவை எதிராளி செலுத்துவதற்கு உடன்பட்டுக்கொண்டிருந்தாலொழிய, சேவை விதிப்பனவொன்று கட்டளையிடப்படுதலாகாது.

## பாகம் II

## நைசைத் தீர்வையைச் சேர்ப்பித்தல்

*நைசைத் தீர்வையின் சேர்ப்பிப்பு சாதாரணமாகப் பதிவஞ்சல் மூலமாக விருத்தல்*

**8**. (1) எதிராளியின் நிலைப்பாடு தொடர்பில், தோன்றுவதற்கும் காரணங்காட்டுவதற்குமான அனுமதியை நாடி விண்ணப்ப மொன்றைச் செய்வதற்கான நியாயமான சந்தர்ப்பமொன்றை எதிராளிக்கு அளிக்கும் அதேவேளையில் வழக்காளியினால் துணிவுரைக்கப்பட்டவாறு வளவுகளின் உடைமையை மீளப்பெறு வதற்கு எதிராளிக்கு நைசைத் தீர்வையொன்று சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) நைசைத் தீர்வையானது, வளவுகளில் அல்லது அறிவித்தல்கள் எவையேனுமிருப்பின், அவற்றைச் சேர்ப்பிப்பதற்காகக் குத்தகை உடன்படிக்கையில் எதிராளியினால் கொடுக்கப்பட்ட முகவரியில் சாதாரணமாகப் பதிவஞ்சல்மூலம் எதிராளிக்குச் சேர்ப்பிக்கப் படுதல் வேண்டும்.

(3) நீதிமன்றப் பதிவாளர், 5 ஆம் பிரிவின்கீழ் நைசைத் தீர்வை பதியப்பட்ட தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குப் பிந்தாதவொரு

காலப்பகுதியினுள், எதிராளிக்கு நைசைத் தீர்வையைச் சேர்ப்பிப் பதற்கான நடவடிக்கையைத் தொடக்கிவைத்தல் வேண்டும்.

*மன்றாணை அலுவலரொருவரினால் நைசைத் தீர்வை சேர்ப்பிக்கப் படுதல்*

**9.** (1) நீதிமன்றம், 5 ஆம் பிரிவின்கீழ் நைசைத் தீர்வை பதியப்பட்ட பின்னர் உடனடியாக அதற்கென விண்ணப்பம் செய்யப்படுவதன் மீதும், அதன் தற்றுணிபின்படியும், பதிவஞ்சல்மூலம் நைசைத் தீர்வையைச் சேர்ப்பிப்பதுடன் சேர்த்து மேலதிகமாக, ஒரு மன்றாணை அலுவலரினூடாக நைசைத் தீர்வையை எதிராளிக்கு நேரடியாக அளிப்பதன்மூலம் அல்லது வழங்குவதன்மூலம் அது சேர்ப்பிக்கவும்படலாமெனக் கட்டளையிடலாம்.

(2) அத்தகைய நைசைத் தீர்வை (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒரு மன்றாணை அலுவலரினூடாகச் சேர்ப்பிக்கப்படவேண்டுமெனக் கட்டளையிடப்படும் விடயத்தில், நீதிமன்றப் பதிவாளர், இரண்டாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் கட்டளையுடன் சேர்த்து நைசைத் தீர்வை அத்தகைய மன்றாணை அலுவலரினால் பெறப்பட்டதிலிருந்து பத்து நாட்களினுள் எதிராளிக்கு அந்நைசைத் தீர்வையைச் சேர்ப்பிக்கும்படி மன்றாணை அலுவலருக்கு அதிகார மளித்தல் வேண்டும்.

(3) நைசைத் தீர்வை இலங்கையின் எப்பாகத்திலும் சேர்ப்பிக்கப்படலாம். ஒரு மன்றாணை அலுவலரினூடாக நேரடியாகச் சேர்ப்பிக்கப்படுவதற்குக் கட்டளையிடப்பட்ட நைசைத் தீர்வையொன்று அதனை வழங்குகின்ற நீதிமன்றத்தின் நியா யாதிக்கத்தினது இடப்பிரதேச எல்லைகளுக்கு வெளியே சேர்ப்பிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுமிடத்து, அந் நைசைத் தீர்வை, எதிராளி எந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வதிகின்றாரென நம்பப்படுகின்றதோ அந்த நீதிமன்றத்துக்கு அத்தகைய நீதிமன்றத்தினால் உடனடியாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நைசைத் தீர்வையை எதிராளிக்கு முறை யாகச் சேர்ப்பிக்கப்படச்செய்வது கடைசியாகக் குறிப்பிடப்பட்ட நீதிமன்றத்தின் கடமையாதலும் வேண்டும்.

(4) நைசைத் தீர்வையொன்று அதனை வழங்குகின்ற நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினது இடப்பிரதேச எல்லைகளுக்கு வெளியே சேர்ப்பிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுமிடத்து, நீதிமன்றமானது, அதன் தற்றுணிபின்பேரில் அல்லது வழக்காளியினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது, பதியப்படவேண்டிய காரணங்களுக்காகவும் செலவுதொகைகள்பற்றிய அத்தகைய நியதிகளின்மேலும், நைசைத் தீர்வையை அந்நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினது இடப்பிரதேச எல்லைகளுக்கு வெளியே சேர்ப்பிக்கும்படியும் ஒரு விசேட மன்றாணை சேர்ப்பிப்பவராகப் பணியாற்றும்படியும் அந்நீதிமன்றத்தின் மன்றாணை அலுவலருக்கு அதிகாரமளிக்கலாம்.

(5) எதிராளியின் அல்லது அவரது சார்பில் வேறேவரேனும் ஆளின் கையொப்பத்தை அல்லது கைப்பெருவிரலடையாளத்தை, அல்லது இரண்டையும், நைசைத் தீர்வை சேர்ப்பிக்கப்பட்டமைக்கான ஒப்புக்கொள்ளலாக மூலக்கட்டளையின்மீது பெற்றுக்கொள்வதற்கு முயற்சித்தல் மன்றாணை அலுவலரின் கடமையாதல் வேண்டும். மன்றாணை அலுவலர், அக்கட்டளையை (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இரண்டாம் அட்டணையிற் குறித்துரைக்கப்பட்ட படிவத்திற்றரப்பட்டுள்ளவாறு நைசைத் தீர்வை சேர்ப்பிக்கப்பட்ட முறையை நீதிமன்றத்துக்குத் தெரிவிக்கின்ற அறிக்கையுடன் சேர்த்து நீதிமன்றத்துக்குத் திருப்பிக்கொடுத்தல் வேண்டும்.

(6) உரிய விழிப்புக்கவனத்தைப் பிரயோகிப்பதன்மூலம் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாகச் சேர்ப்பிப்பைப் பயனுறுத்தமுடியாவிடின், மன்றாணை அலுவலர், நீதிமன்றத்தின் மேற்கொண்ட ஏதேனும் பணிப்பின்றி வளவுகளின் ஏதேனும் துலாம்பரமானவொரு பாகத்தில் நைசைத் தீர்வையை ஒட்டுவதற்கும் அத்தகைய சேர்ப்பிப்பை நீதிமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கும் அதிகாரமளிக்கப்படுகின்றார். மேற்சொல்லப்பட்ட முறையில் சேர்ப்பிக்கப்பட்ட நைசைத் தீர்வை, எதிராளிக்கு நேரடியாக உரியமுறையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

**குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல்**

ஒரு பகிரங்க அலுவலருக்கு நைசைத் தீர்வையைச் சேர்ப்பித்தல்

**10**. (1) எதிராளி ஒரு பகிரங்க அலுவலராக இருக்குமிடத்து, நீதிமன்றம் அதன் தற்றுணிபின்படி, பதிவஞ்சல்மூலம் எதிராளிக்கு நைசைத் தீர்வையை அனுப்புவதுடன் சேர்த்து மேலதிகமாக, எதிராளி எந்த அலுவலகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அந்த அலுவலகத் தலைவருக்குப் பதிவஞ்சல்மூலம் நைசைத் தீர்வையின் பிரதியொன்றை இருபிரதிகளில் அனுப்பிவைத்தலும் வேண்டும்.

(2) இப்பிரிவில், “அலுவலகத்தலைவர்” என்பது,-

(அ) இலங்கைத் தரைப்படையின், இலங்கைக் கடற்படையின் அல்லது இலங்கை வான்படையின் ஏதேனும் அலகின் உறுப்பினரொருவர் தொடர்பாகப் பயன்படுத்தப்படும்போது, அவ்வலகின் ஏவும் அலுவலர் என்று பொருளாகும்;

(ஆ) ஒரு மாகாணசபையில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆளொருவர் தொடர்பாகப் பயன்படுத்தப்படும்போது, அம்மாகாணசபையின் செயலாளர் என்று பொருளாகும்;

(இ) மாகாணப் பகிரங்க சேவையில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆளொருவர் தொடர்பாகப் பயன்படுத்தப்படும்போது, அத்தகைய ஆள் எந்தத் திணைக்களத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அந்தத் திணைக்களத்தலைவர் என்று பொருளாகும்;

(ஈ) ஓர் உள்ளூர் அதிகாரசபையில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆளொருவர் தொடர்பாகப் பயன்படுத்தப்படும்போது, அந்த உள்ளூர் அதிகாரசபை ஒரு மாநகரசபையாகவிருப்பின், அத்தகைய மாநகர

சபையின் மாநகர ஆணையாளர் என்று பொருளாகும் என்பதுடன் அந்த உள்ளூர் அதிகாரசபை ஒரு நகரசபையாக அல்லது ஒரு பிரதேசசபையாக விருப்பின், அத்தகைய சபையின் தவிசாளர் அல்லது செயலாளர் என்றும் பொருளாகும்; அத்துடன்

(உ) வேறெவரேனும் பகிரங்க அலுவலர் தொடர்பாகப் பயன்படுத்தப்படும்போது, அத்தகைய ஆள் எந்த அரசாங்கத் திணைக்களத்தில் தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ளாரோ அந்த அரசாங்கத் திணைக்களத் தலைவர் என்று பொரு ளாகும்.

எதிராளி மேன் முறையீடு செய்வதற்கான அனுமதிக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பிப்பதற்கு நைசைத் தீர்வையில் தேதி குறித்துரைக்கப் படுதல்

**11.** (1) தோன்றுவதற்கும் நைசைத் தீர்வைக்கெதிரான காரணம் ஏதேனுமிருப்பின், அதனைக் காட்டுவதற்குமான அனுமதியை நாடி எதிராளி எத்தேதியன்று விண்ணப்பமொன்றைச் செய்யவேண்டுமோ அத்தேதியாக நைசைத் தீர்வையிற் குறித்துரைக்கப்பட வேண்டிய தேதியானது, எதிராளியின் வதிவிடத்திலிருந்து நீதிமன்றத்துக்கான தூரத்தைக் கவனத்துட்கொண்டு, வசதியான முறையில் குறித்துரைக்கப்படமுடியுமான வெள்ளெனவானவொரு தேதியாகவிருத்தல் வேண்டும். அத்தகைய ஏதேனும் சந்தர்ப்பத்தில், குறித்துரைக்கப்படவேண்டிய சொல்லப்பட்ட தேதியானது நைசைத் தீர்வைத் தேதியிலிருந்து ஆறு வாரங்களுக்குப் பிந்தாததாகவிருத்தல் வேண்டும்.

(2) தோன்றுவதற்கும் அத்தகைய நைசைத் தீர்வைக்கெதிராகக் காரணங்காட்டுவதற்குமான அனுமதியை நாடி எதிராளி விண்ணப்பமொன்றைச் செய்வதனை இயலச்செய்வதற்கு நீதிமன்றம் ஏதேனும் மேலதிகக் கால அவகாசத்தை எதிராளிக்கு வழங்குதலாகாது.

பாகம் III

## தோன்றுவதற்கும் காரணங்காட்டுவதற்குமான விண்ணப்ப மொன்றை எதிராளி செய்தல்

*அனுமதி மற்றும் பிணைப் பொறுப்பின் மேல் மட்டுமே எதிராளி தோன்றுதல் அல்லது காரணங் காட்டுதல்*

**12.** (1) இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்கொன்றில், எதிராளி, தோன்றுவதற்கும் காரணங்காட்டுவதற்கும் நைசைத் தீர்வையை வழங்கிய நீதிமன்றத்திடமிருந்து முதலில் அனுமதி பெற்றாலொழிய, அவர் தோன்றி நைசைத் தீர்வைக்கெதிராகக் காரணங்காட்டுதலாகாது.

(2) எதிராளி, (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, ஒரு சத்தியக் கடுதாசியினால் ஆதாரப்படுத்தப்பட்டதான தோன்றுவதற்கும் நைசைத் தீர்வைக்கெதிராகக் காரணங் காட்டுவதற்குமான அனுமதிக்காக மனு என்றவகையாக விண்ணப்பமொன்றைக் கோப்பிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய மனுவும் சத்தியக்கடுதாசியும் வழக்காளியின் வழக்கைக் குறிப்பானமுறையில் கையாளுதலும் வழக்காளியின் வழக்குக்கான எதிர்வாதம் என்னவென்றும் அதனை ஆதாரப்படுத்துவதற்கு எந்த நிகழ்வுகளின்மேல் நம்பப்படுகின்றதென்றும் தெளிவாகவும் சுருக்கமாகவும் குறிப்பிடுதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட மனுவும் சத்தியக்கடுதாசியும் கோப்பிடப்படுவதன்மேல், மனுவினதும் சத்தியக்கடுதாசியினதும் உள்ளீடுகள் வளவுகளின் உடைமையை மீளப்பெறுவதற்காக வழக்காளியின் வழக்குக்கெதிராக முதற்றோற்ற வளவில் நிலைபெறுதகு எதிர்வாதமொன்றை வெளிக்காட்டுகின்றனவென நீதிமன்றம் திருப்திப்படின், பிணைப்பொறுப்புக்கமைய, தோன்றுவதற்கும் நைசைத் தீர்வைக்கெதிராகக் காரணங்காட்டுவதற்கும் எதிராளிக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கலாம்.

(4) மனுவினதும் சத்தியக்கடுதாசியினதும் உள்ளீடுகள் முதற்றோற்றவளவில் நிலைபெறுதகு எதிர்வாதமொன்றை வெளிக்காட்டுகின்றனவென நீதிமன்றம் திருப்திப்படாவிடின், நீதிமன்றமானது, (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விண்ணப்பத்தை மறுத்தல் வேண்டுமென்பதுடன் நைசைத் தீர்வையை முற்றானதாக்குதலும் வேண்டும்.

எதிராளியினால் பிணைப் பொறுப்புக் கொடுத்து தவப்படுதல்

**13.** பன்னிரெண்டாம் பிரிவின்கீழ் தோன்றுவதற்கும் காரணங் காட்டுவதற்குமான அனுமதியை நீதிமன்றம் வழங்குமிடத்து, நீதிமன்றமானது, பின்வருவனவற்றுக்குக் குறையாத பிணைப் பொறுப்பைக் கொடுத்துதவும்படி எதிராளிக்குக் கட்டளையிடுதல் வேண்டும்:-

(அ) நைசைத் தீர்வையில் இறைஞ்சிக்கேட்கப்பட்டுக் குறித் துரைக்கப்பட்ட குத்தகை வாடகை நிலுவைகளின் கூட்டுமொத்தமாக வழக்காளிக்கு வருமதியான பணத் தொகை;

(ஆ) அத்தகைய உரிமைக்கோரிக்கை செய்யப்பட்டிருப்பின், நைசைத் தீர்வையில் இறைஞ்சிக்கேட்கப்பட்டுக் குறித் துரைக்கப்பட்டதான தோன்றுவதற்கும் காரணங் காட்டுவதற்குமான அனுமதியை வழங்குகின்ற கட்டளைத் தேதிவரை சேவை விதிப்பனவுகளாக வழக்காளிக்கு வருமதியான கூட்டுமொத்தப் பணத்தொகை; அத்துடன்

(இ) குத்தகை உடன்படிக்கை முடிவுறுவதிலிருந்து அல்லது அதன் முடிவுறுத்துகையின் பயனுறும் தேதியிலிருந்து, தோன்றுவதற்கும் காரணங்காட்டுவதற்குமான அனுமதியை வழங்குகின்ற கட்டளைத் தேதிவரையும் அத்தகைய அனுமதியை வழங்குகின்ற தேதியிலிருந்து ஓராண்டைக் கொண்டவொரு மேலதிகக் காலப்பகுதிக் காகவும், நைசைத் தீர்வையில் இறைஞ்சிக்கேட்கப்பட்டுக் குறித்துரைக்கப்பட்ட ஒழித்துக்கட்டப்பட்ட சேதவீடுகளாக வழக்காளிக்கு வருமதியான கூட்டுமொத்தப் பணத் தொகை.

பிணைப் பொறுப்பு இருவாரங்களினுள் வைப்பிலிடப் படும் படி கட்டளையிடப் படுதல்

**14.** (1) பதின்மூன்றாம் பிரிவின்கீழ் நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்ட பிணைப்பொறுப்பு, கட்டளைத் தேதியிலிருந்து இருவாரங்களினுள் காசாக நீதிமன்றத்தில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) நீதிமன்றப் பதிவாளர், நீதிமன்றத்தினாற் பேணப்பட்ட வட்டி திரளுகின்ற வங்கிக்கணக்கொன்றுக்கு அதனை வைப்பிலிடுவதற்கு

வைப்புக் குறிப்பொன்றை வழங்கச் செய்தல் வேண்டுமென்பதுடன், பணங்களானவை, நீதிமன்றத்தினால் மேற்கொண்ட கட்டளையொன்று ஆக்கப்படும்வரை அக்கணக்கில் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

(3) எதிராளி, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இருவாரக் காலப்பகுதியினுள் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மூலம், பிணைப்பொறுப்பை வைப்பிலிடுவதற்கான அவரது இயலாமை பற்றி நீதிமன்றத்தின் திருப்திக்குப் போதிய காரணங்களை நிலைநாட்டினாலொழிய, நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்ட பிணைப்பொறுப்பை வைப்பிலிடுவதற்கு நீதிமன்றம் ஏதேனும் நீட்டிய காலப்பகுதியை வழங்குதலாகாது. அத்தகைய பட்சத்தில், நீதிமன்றம், ஒரு மேலதிகக் காலப்பகுதியை வழங்கலாம்; இது, நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட முன்னைய காலப்பகுதி முடிவுற்றதிலிருந்து இருவாரங்களை விஞ்சுதலாகாது.

நீதிமன்றத்தினால் நைசைத் தீர்வை முற்றான தாக்கப்படுதல்

**15**. எதிராளி –

(அ) 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நைசைத் தீர்வையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று, தோன்றுவதற்கும் காரணங்காட்டுவதற்குமான அனுமதிக்கான விண்ணப்பமொன்றைச் செய்யத் தவறுகின்றவிடத்து;

(ஆ) தோன்றுவதற்கும் காரணங்காட்டுவதற்குமான அனுமதிக்கான விண்ணப்பமொன்றைச் செய்திருந்து, வளவுகளின் உடைமையை மீளப்பெறுவதற்காக வழக்காளியின் வழக்குக்கெதிராக முதற்றோற்றவளவில் நிலைபெறுதகு எதிர்வாதமொன்றை வெளிக்காட்டுவதற்குத் தவறியுள்ளவிடத்து; அல்லது

(இ) 14 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் 13 ஆம் பிரிவின்கீழ் கட்டளையிடப்பட்ட பிணைப்பொறுப்பைக் கொடுத்துதவத் தவறுகின்றவிடத்து,

நீதிமன்றமானது, எதிராளிக்கு மேற்கொண்ட ஏதேனும் அறிவித்தலின்றி நைசைத் தீர்வையை முற்றானதாக்குதல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில், நைசைத் தீர்வையின்மேல், நீதிபதியானவர், "நைசைத் தீர்வை முற்றானதாக்கப்பட்டது" அல்லது அதே பொருள்பட்ட சொற்களைப் புறக்குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய புறக்குறிப்பின்மீது தேதியிடுதலும் கையொப்பமிடுதலும் வேண்டும்:

ஆயின், நைசைத் தீர்வையொன்று, அது தனிவேறாக்கத்தக்க பாகங்களைக் கொண்டிருப்பின், பகுதியளவில் பொறுப்புவிடுவிக்கப்படலாம் மற்றும் பகுதியளவில் முற்றானதாக்கப்படலாம் என்பதுடன் இதன்கண் சட்டமாக்கப்பட்ட எதுவும், நைசைத் தீர்வையின் விளைவாக வழக்காளியினதும் எதிராளியினதும் சம்மதத்தின்மீது நீதிமன்றத்தினால் ஏதேனும் கட்டளை ஆக்கப்படுவதனைத் தடுத்தலுமாகாது.

தவறுகையின் மீது நைசைத் தீர்வையை முற்றானதாக்குகின்ற கட்டளை மேன்முறையீட்டுக்குட்படத்தக்கதல்ல, ஆனால் புறத்தொதுக்கப்படலாம்

**16.** (1) பதினைந்தாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் நியதிகளின்படி விண்ணப்பமொன்றைச் செய்வதற்கு எதிராளி தவறியமைகாரணமாக முற்றானதாக்கப்பட்டுள்ள நைசைத் தீர்வைக்கெதிராக எதிராளியினால் மேன்முறையீடொன்று செய்யப்படுதலாகாது, ஆனால் முற்றான தீர்வை பதியப்பட்ட பின்னர் நியாயமானவொரு காலத்தினுள், எவ்விடயத்திலும் ஓராண்டுக்குப் பிந்தாமல், பின்வரும் ஏதுக்களின்மீது அத்தகைய முற்றான தீர்வையைப் புறத்தொதுக்குவதற்கு அதற்கெதிராகக் கோப்பிடப்பட்ட மனு மற்றும் சத்தியக்கடுதாசி என்றவகையாக எதிராளியினாலான விண்ணப்பமொன்றை ஏற்றுக்கவனிப்பதற்கு நீதிமன்றம் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும்:-

(அ) விபத்து அல்லது துரதிர்ஷ்டம் அல்லது இறைவனின் செயல் காரணமாக எதிராளிக்கு நைசைத் தீர்வை சேர்ப்பிக்கப்பட்டபின்னர் அவர் நீதிமன்றத்தில் தோன்றுவதற்குத் தடுக்கப்பட்டார்; அல்லது

(ஆ) அத்தகைய நைசைத் தீர்வை எதிராளிக்குச் சேர்ப்பிக்கப்படவில்லை.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதுக்களுடன் சேர்த்து மேலதிகமாக, எதிராளி, தோன்றுவதற்கும் முற்றான தீர்வைக்கெதிராகக் காரணங்காட்டுவதற்குமான அனுமதிக்கான ஏதுக்களை மனுவிலும் சத்தியக்கடுதாசியிலும் வழக்குரைத்தலும் வேண்டும். மனுவும் சத்தியக்கடுதாசியும் குறிப்பானமுறையில் வழக்காளியின் வழக்கைக் கையாளுதல் வேண்டுமென்பதுடன் வழக்காளியின் வழக்குக்கான எதிர்வாதம் என்னவென்றும் அதனை ஆதாரப்படுத்துவதற்கு எந்த நிகழ்வுகளின்மேல் நம்பப்படு கின்றதென்றும் தெளிவாகவும் சுருக்கமாகவும் குறிப்பிடுதலும் வேண்டும்.

(3) ஓராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் நியதிகளின்படி மனுவும் சத்தியக்கடுதாசியும் எதிராளியினால் கோப்பிடப்படுவதன்மேல், நீதிமன்றம், கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றைத் திறத்தவர் களுக்குக் கொடுத்தபின்னர் -

(அ) 15 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் விண்ணப்ப மொன்றைச் செய்வதற்கு எதிராளியின் பாலான தவறுதல் (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஏதுவின் காரணமாகவிருந்ததென்றும்; அத்துடன்

(ஆ) முதற்றோற்றவளவில் நிலைபெறுதகு எதிர்வாதமொன் றாகவுள்ள எதிர்வாதமொன்றை எதிராளி வெளிக்காட்டி யுள்ளாரென்றும்,

திருப்திப்படுவதன்மீது, நீதிமன்றம், 13 ஆம் பிரிவின்கீழ் கொடுத் துதவப்பட வேண்டிய பிணைப்பொறுப்புக்கமைய, முற்றான தீர்வையைப் புறத்தொதுக்கலாமென்பதுடன் அத்தகைய பிணைப் பொறுப்பு 14 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி யினுள் வைப்பிலிடப்படின், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கருமத்தைத் தீர்மானிப்பதற்கு முற்படுதலும் வேண்டும்.

(4) அத்தகைய நோக்கத்துக்காகக் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியினுள் (3) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பிணைப் பொறுப்பைக் கொடுத்துதவுவதற்கு எதிராளி தவறினால், நீதிமன்ற மானது அப்போது நைசைத் தீர்வையை முற்றானதாக்கிக் கட்டளை யொன்றை ஆக்குதல் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக எதிராளி நீதிமன்றத்தைத் திருப்திப் படுத்தத் தவறுமிடத்து, நீதிமன்றமானது செலவுதொகைகளுடன், எதிராளியின் விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்தல் வேண்டும்.

## பாகம் IV

## தோன்றுவதற்கும் காரணங்காட்டுவதற்குமான அனுமதி வழங்கப்பட்டபின்னரான நடவடிக்கைமுறை

தோன்று வதற்கும் காரணங் காட்டுவதற்கு மான அனுமதி வழங்கப்படு மிடத்தான நடவடிக்கை முறை

**17.** (1) நீதிமன்றம் -

(அ) 12 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் தோன்று வதற்கும் நைசைத் தீர்வைக்கெதிராகக் காரணங் காட்டுவதற்குமான அனுமதியை எதிராளிக்கு வழங்குமிடத்தும் கட்டளையிடப்பட்ட பிணைப் பொறுப்பு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் வைப்பிலிடப்படுமிடத்தும்; அல்லது

(ஆ) முற்றான தீர்வையைப் புறத்தொதுக்கி, 16 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் தோன்றுவதற்கும் காரணங் காட்டுவதற்குமான அனுமதியை எதிராளிக்கு வழங்குமிடத்தும் கொடுத்துதவப் படுவதற்குக் கட்டளையிடப்பட்ட பிணைப்பொறுப்பு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் வைப்பி லிடப்படுமிடத்தும்,

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 384, 385, 386 மற்றும் 387 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் நீதிமன்றத்தின்முன்னரான வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 384 ஆம் பிரிவின் நோக்கத்துக்காக, தோன்றுவதற்கும் காரணங்காட்டு வதற்குமான அனுமதிக்காக எதிராளியினால் கோப்பிடப்பட்ட விண்ணப்பம், எதிராளியின் ஆட்சேபனையாகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விண்ணப்பத்துக்கு ஆதாரமாக எதிராளியினால் கோப்பிடப்பட்ட சத்தியக்கடுதாசி எதிராளியின் சத்தியக்கடுதாசியாகவிருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) நீதிமன்றமானது, தோன்றுவதற்கும் காரணங்காட்டுவதற்குமான அனுமதி வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டினுள், ஒன்றில் நைசைத் தீர்வையைப் பொறுப்புவிடுத்து அல்லது நைசைத் தீர்வையை முற்றானதாக்கி, பிராதின் விடயத்தில் இறுதிக் கட்டளையை எடுத்துமொழிதல் வேண்டும்.

(4) அவ்வாறு எடுத்துமொழியப்பட்ட இறுதிக்கட்டளை, ஒன்றில் "நைசைத் தீர்வை பொறுப்புவிடுவிக்கப்பட்டது" அல்லது "நைசைத் தீர்வை முற்றானதாக்கப்பட்டது" என்னும் சொற்களுடன் அல்லது அதே பொருள்பட்ட சொற்களில் நைசைத் தீர்வையில் புறக் குறிப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய புறக்குறிப்பு நீதிமன்ற நீதிபதியினால் தேதியிடப்பட்டுக் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்:

ஆயின், நைசைத் தீர்வையொன்று, தனிவேறாக்கத்தக்க பாகங்களை அது கொண்டிருப்பின், பகுதியளவில் பொறுப்பு விடுவிக்கப்பட்டுப் பகுதியளவில் முற்றானதாக்கப்படலாம் என்பதுடன் இதன்கண் சட்டமாக்கப்பட்ட எதுவும் நைசைத் தீர்வையின் அடிப்படையில் வழக்காளியினதும் எதிராளியினதும் சம்மதத்தின்மூலம் ஏதேனும் கட்டளை ஆக்கப்படுவதனைத் தடுத்தலுமாகாது.

**18**. இச்சட்டத்தின்கீழான எவையேனும் வழக்குநடவடிக்கைகளில், குத்தகை உடன்படிக்கையின் மூலப்பிரதிகள் அல்லது எந்த வேறு ஆவணங்கள் பிராதுடன் கோப்பிடப்பட்டனவோ அல்லது எந்த வேறு ஆவணங்களை வழக்கானது அடிப்படையாகக் கொண்டதோ அந்த வேறு ஆவணங்களின் பிரதிகள், வழக்கானது நீதிமன்றத்தில் ஆதாரப்படுத்தப்படும்போது நீதிமன்றத்தினால் பரிசோதனை செய்யப்படுவதற்குக் கிடைக்கக்கூடியனவாக்கப் படவேண்டுமென நீதிமன்றம் கட்டளையிடலாம். குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய உடன்படிக்கை அல்லது ஆவணம் அத்தகைய பரிசோதனையின்பின்னர் வழக்காளிக்குத் திருப்பிக்கொடுக்கப்படுதல் வேண்டும்.

கோப்பிடப்பட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகள் பரிசோதனைக் காகக் கிடைக்கக் கூடியவையாக்கப் படவேண்டும்

நட்டஈடு அளித்தல்

**19.** (1) நைசைத் தீர்வையொன்றைப் பதிந்தபின்னர்-

(அ) ஏதேனும் முக்கியமான நிகழ்வை வேண்டுமென்று ஒடுக்கியமையின்மூலம் அல்லது வெளிக்காட்டாமையின் மூலம் அத்தகைய நைசைத் தீர்வை பெற்றுக்கொள்ளப்பட்டதென நீதிமன்றத்துக்குத் தோன்றுமிடத்து; அத்துடன்

(ஆ) முக்கியமான நிகழ்வுகளின் அத்தகைய வேண்டுமென்ற ஒடுக்குகையின் அல்லது வெளிக்காட்டாமையின் ஏதுக்களின்மீது நைசைத் தீர்வை பொறுப்புவிடுக்கப்பட்டு வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டவிடத்து,

நீதிமன்றமானது, அதேவழக்கில், நைசைத் தீர்வை எந்த எதிராளிக்கெதிராகப் பதியப்பட்டதோ அந்த எதிராளியினால் கோப்பிடப்பட்ட விண்ணப்பத்தின்மீது, வழக்காளியினால் செலுத்தப்படவேண்டியதும் நியாயமானதென நீதிமன்றம் கருதுகின்றவாறானதுமான அத்தகைய பணத்தொகையில், அத்தகைய எதிராளிக்கு விளைவிக்கப்பட்ட செலவுகள் அல்லது ஊறுபாட்டுக்காக நட்டஈட்டையும் செலவுதொகைகளையும் அளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட அளிப்பொன்று, இச்சட்டத்தின்கீழான ஏதேனும் அடுத்துப்பின்னரான வழக்கு நடவடிக்கையில் நட்டஈட்டுக்கான ஏதேனும் வழக்குக்கான தடையொன்றாகத் தொழிற்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகின்றமை எவ்வாறிருப்பினும், அத்தகைய வழக்கில் பதியப்பட்ட நைசைத் தீர்வை தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நட்டஈட்டுக்கான விண்ணப்பமொன்று செய்யப்படுமிடத்து, அவ்வாறு தள்ளுபடிசெய்யப்பட்ட வழக்கு, அத்தகைய விண்ணப்பம் தீர்மானிக்கப்படும்வரை தொடர்வதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**எதிராளியினால் வளவுகளின் உடைமை ஒப்படைக்கப் படுதல் முதலியன**

***20.*** *(1)* நைசைத் தீர்வைக்குப் பதிலிறுக்கும்வகையில் எதிராளி நீதிமன்றத்தில் தோன்றி வளவுகளின் உடைமையை ஒப்படைப்பதற்கு அல்லது திறத்தவர்களினால் உடன்பட்டுக்கொள்ளப்படக் கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளின் மீது, விடயத்துக்கேற்ப, குத்தகை வாடகைகள், சேவை விதிப்பனவுகள் மற்றும் ஒழித்துக்கட்டப்பட்ட சேதவீடுகளைத் தீர்த்துவைப்பதற்கு உடன்படுமிடத்து, நீதிமன்றத்தின் முன்னரான திறத்தவர்களினால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட அத்தகைய நியதிநிபந்தனைகளுக் கமைய நைசைத் தீர்வை முற்றானதாக்கப்படுதல் வேண்டும்.

*(2)* இச்சட்டத்தின் அடுத்துவரும் ஏற்பாடுகளில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், *(1)* ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட முற்றான தீர்வையானது திறத்தவர்களினால் உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறாக வழக்குநடவடிக்கைகளின் நிறைவேற்றுகையினது நிறுத்திவைத்தலொன்றாகத் தொழிற்படுதல் வேண்டும்; ஆயின், எதிராளி, தீர்த்துவைத்தலின் நியதிநிபந்தனைகளுள் எவற்றுக்கும் முரணாகச் செயலாற்றுதலாகாது; இப்பட்சத்தில், வழக்காளி, அத்தகைய முற்றான தீர்வையை நிறைவேற்றுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

**ஒரு நைசைத் தீர்வையைப் பொறுப்பு விடுவித்தல் அல்லது ஒரு வழக்கைத் தள்ளுபடி செய்தல் ஏதேனும் அடுத்துப் பின்னரான வழக்கைத் தடை செய்தலாகாது**

***21.*** இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஒரு நைசைத் தீர்வையைப் பொறுப்புவிடுவித்தலானது அல்லது ஒரு வழக்கைத் தள்ளுபடி செய்தலானது, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் உள்ள ஏற்புடையற்பாலதான நடவடிக்கைமுறையொன்றின்கீழான ஏதேனும் தோதான வழக்குக் காரணத்தின்மீது, குத்தகைகொடுநரினால் அல்லது வளவுகளின் உடைமைக்கு உரித்துள்ள வேறெவரேனுமாளினால் அத்தகைய வளவுகளின் உடைமையை மீளப்பெறுவதற்காகத் தொடுக்கப்பட்ட வேறேதேனும் வழக்குக்கான தடையொன்றாகத் தொழிற்படுதலாகாது.

பாகம் V

## நைசைத் தீர்வையை முற்றானதாக்கிய பின்னரான நடவடிக்கைமுறை

**22.** (1) நீதிமன்றக் கட்டளையொன்றுக்கமைய, இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்கொன்றில் பதியப்பட்ட நைசைத் தீர்வையொன்று முற்றானதாக்கப்படுமிடத்து, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 225 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினதும் 323 ஆம் பிரிவினதும் நியதிகளின்படி பிசுக்காலுக்கு முறையாக வழங்கப்பட்ட நிறைவேற்றெழுத்தாணையொன்றாக அது கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் எதிராளிக்கு ஏதேனும் மேற்கொண்ட அறிவித்தலின்றி, தீர்வையை முற்றானதாக்கிய கட்டளைத் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குப்பின்னர் அது நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

*முற்றான தீர்வை நிறைவேற்றெழுத் தாணையொன்றாக இருப்பதாகக் கருதப்படுதல்*

(2) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், முற்றானதாக்கப்பட்ட நைசைத் தீர்வையின் நிறைவேற்றுகை நிறுத்திவைக்கப்படுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நிறைவேற்றெழுத்தாணையானது, நைசைத் தீர்வை எத்தேதியன்று முற்றானதாக்கப்பட்டதோ அத்தேதியிலிருந்து ஓராண்டுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்குச் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் எழுத்தாணைகளை நிறைவேற்றுவதற்காகக் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையிற் குறித்துரைக்கப்பட்ட முறையில் அதனை நிறைவேற்றுவது பிசுக்காலின் கடமையாதலும் வேண்டும்.

(4) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், முற்றானதாக்கப்பட்டவொரு நைசைத் தீர்வை தொடர்பில், எதிராளியினால் மேன்முறையீடொன்று அல்லது மீளாய்வுக்கான விண்ணப்பமொன்று அல்லது முன்னிலை மீட்புக்கான விண்ணப்பமொன்று செய்யப்படுதல், வழக்குநடவடிக்கைகளை வெளிப்படையாக நிறுத்திவைக்கின்ற கட்டளையொன்றை மேன்முறையீட்டுக்கான நீதிமன்றம் ஆக்கினாலொழிய, அத்தகைய வழக்குநடவடிக்கைகளை நிறுத்திவைப்பதற்கான ஏது ஒன்றாக இருத்தலாகாது.

(5) எதிராளியினால் செய்யப்பட்டவொரு மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பமொன்றைப் பின்பற்றி நிறைவேற்றுகையை வெளிப்படையாக நிறுத்திவைக்கின்ற கட்டளையொன்றை மேன்முறையீட்டுக்கான நீதிமன்றம் ஆக்குமுன்னர், பிரதான மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும் பட்சத்தில், ஒழித்துக்கட்டப்பட்ட சேதவீடுகள் அல்லது வழக்கின் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு மேன்முறையீட்டுக் கான நீதிமன்றம் தகுதியெனக் கருதக்கூடியவாறான அவற்றின் அத்தகைய பாகமுட்பட 13 ஆம் பிரிவின்கீழ் வழக்காளியின் முழுப் பணவகையான உரிமைக்கோரிக்கையையும் திருப்திசெய்வதற்காகக் காசுப் பிணைப்பொறுப்பொன்றைக் கொடுத்துதவும்படி அது எதிராளியைக் கோருதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய நிறுத்திவைத்தற் கட்டளையெதுவும், வழக்காளிக்கு அல்லது அவரது பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிக் குப் போதிய அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய, வழங்கப் படுதலாகாது.

எதிர்ப்பு அவமதிப்பாகக் கருதப்படுதல்

**23.** (1) இருபத்திரெண்டாம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எழுத்தாணையொன்றை நிறைவேற்றுகையில், பிசுக்கால் எவரேனு மாளினால் எதிர்க்கப்படின் அல்லது அவருக்கு முட்டுக்கட்டை யிடப்படின், பிசுக்கால் ஆனவர், அந்த எதிர்ப்பு அல்லது முட்டுக் கட்டையிலிருந்து பதினான்கு நாட்களினுள் அத்தகைய எதிர்ப்பை அல்லது முட்டுக்கட்டையை நீதிமன்றத்துக்கு அறிக்கையிடுதல் வேண்டுமெனப்துடன் நீதிமன்றமானது, அதன்மேல், அத்தகைய எதிர்ப்பினால் அல்லது முட்டுக்கட்டையினால் ஏற்படுத்தப்பட்ட நீதிமன்ற அவமதிப்புக்காக அவருக்கெதிராக ஏன் நடவடிக்கை யெடுக்கப்படலாகாதெனக் காரணங்காட்டும்படி அவரைத் தேவைப்படுத்தி, எதிர்க்கின்ற அல்லது முட்டுக்கட்டையிடுகின்ற ஆளுக்கெதிராக அறிவித்தலொன்றை வழங்குதலும் வேண்டும்.

(2) (அ) இச்சட்டத்தின்கீழான எழுத்தாணையொன்றை நிறை வேற்றுகையில் பிசுக்காலை எதிர்க்கின்ற அல்லது அவருக்கு முட்டுக் கட்டையிடுகின்ற எவரேனுமாள் -

(i) தீர்ப்புக் கடனாளியாகவிராத அத்தகைய ஆள் ஏதேனும் உரிமையின் அல்லது அக்கறையின் பயனைக்கொண்டு தனது சொந்தக் கணக்கால் அல்லது தீர்ப்புக்கடனாளி தவிர்ந்த எவரேனுமாளின் கணக்கால் அத்தகைய வளவுகளின் முழுமையையும் உடைமைகொண்டுள்ளா

ரென அத்தகைய ஆள் நல்லெண்ணத்துடன் உரிமை கோருவதனால் அந்த எதிர்ப்பு அல்லது முட்டுக்கட்டை இடம்பெற்றுள்ளதென நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பித்தாலொழிய; அல்லது

(ii) அறிவிக்கப்பட்ட உரிமைக்கோரிக்கை, ஏதேனும் உரிமையின் அல்லது அக்கறையின் பயனைக்கொண்டு, தனது சொந்தக் கணக்கால் அல்லது தீர்ப்புக்கடனாளி தவிர்ந்த எவரேனுமாளின் கணக்கால் அத்தகைய வளவுகளின் முழுமையையும் உடைமைகொண்டுள்ளாரென உரிமைகோருகின்ற ஆளொருவரினால் செய்யப்பட்டுள்ளதென நீதிமன்றத்தினால் காணப்பட்டாலொழிய,

நீதிமன்ற அவமதிப்பு புரிந்தவராதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) வின் கீழ் நீதிமன்ற அவமதிப்பு புரிகின்ற ஆளெவரும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாமாண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 303 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், (2) ஆம் உட்பிரிவின்கீழ் மறியற்றண்டனைத்தீர்ப்பொன்று எந்தத் தவறாளருக்கு விதிக்கப்பட்டதோ அந்தத் தவறாளர் ஒருவர் தொடர்பில் ஏற்புடையற்பாலனவாதலாகாது.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளுக்குத் தண்டனையை விதிப்பதுடன் சேர்த்து மேலதிகமாக, இயைபான வளவுகளின் வெற்று மற்றும் அமைதியான உடைமையில் வழக்காளித் தீர்ப்புக்கடன்கொடுநரை இடும்படி நீதிமன்றம் பிசுக்காலுக்குக் கட்டளையிடுதல் வேண்டும்.

வழக்குத் தொடுக்கப்பட்ட பின்னர் எதிராளியினால் வளவுகளின் உடைமை அல்லது அதன் நிலவும் நிலை மாற்றப்படுதல்

**24.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஓர் எதிராளி அல்லது அவரது சட்டப் பிரதிநிதி, வழக்கில் பதியப்பட்ட நைசைத் தீர்வை அத்தகைய எதிராளிக்கு அல்லது அவரது சட்டப் பிரதிநிதிக்குச் சேர்ப்பிக்கப்பட்டபின்னர் எத்தகையதுமான எம்முறையிலேனும் வளவுகளில் மூன்றாந்திறத்தவரொருவரை உடைமையில் இடுதலாகாதென்பதுடன் அத்தகைய செயல் நீதிமன்ற அவமதிப்பாக அமைதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், வழக்கு தள்ளுபடிசெய்யப்படின் அல்லது நைசைத் தீர்வை பொறுப்புவிடுவிக்கப்படின், இத்தடை தொடர்ந்தும் ஏற்புடையற்பாலதாகாது.

(2) நைசைத் தீர்வை சேர்ப்பிக்கப்பட்ட நேரத்தில் இருந்தவாறான அதே நிலைமையில் வளவுகளின் நிலவும் நிலையைப் பேணுவது எதிராளியின் அல்லது அவரது சட்டப் பிரதிநிதியின் கடமையாதல் வேண்டுமென்பதுடன் எதிராளி அல்லது அவரது சட்டப் பிரதிநிதி நீதிமன்றக் கட்டளையொன்றின்றி வளவுகளின் நிலவும் நிலையை மாற்றுதலுமாகாது.

(3) எவையேனும் வளவுகளின் உடைமை (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஒன்றில் பூரணமாக அல்லது பகுதியளவில் மூன்றாந்திறத்தவரொருவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய பராதீனம் வெற்றானதும் வறிதானதுமாகவும் சட்டத்தில் எவ்வலுவோ அல்லது பயனோ அற்றதாகவும் இருத்தல் வேண்டும். அத்தகைய மூன்றாந்திறத்தவரும் அவரின்கீழ் வளவுகளின் உடைமையை வைத்திருக்கின்ற எல்லோரும், அத்தகைய மூன்றாந்திறத்தவர் தீர்வைக்கான திறத்தவரொருவராக இராதபோதிலும், தீர்வையினால் பிணிக்கப்பட்டவொரு திறத்தவரைப்போன்று நிறைவேற்றெழுத்தாணையிலுள்ளவாறு வளவுகளிலிருந்து வெளியேற்றப்படுவதற்கு ஆளாதலும் வேண்டும்.

(4) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றவாளியாகவுள்ள எவரேனுமாள் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(5) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாமாண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 303 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், (4) ஆம் உட்பிரிவின்கீழ் மறியற்றண்டனைத்தீர்ப்பொன்று எந்தத் தவறாளருக்கு விதிக்கப்பட்டதோ அந்தத் தவறாளர் ஒருவர் தொடர்பில் ஏற்புடையற்பாலனவாதலாகாது.

## பாகம் VI

### மேன்முறையீடுகள்

*நீதிமன்றக் கட்டளை யொன்றுக் கெதிராக மேன்முறை யீடுகளைச் செய்தல்*

**25.** (1) (அ) 15 ஆம் பிரிவின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட ஏதுக்களின்மீது எதிராளியினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தை மறுப்பதன்மூலம் ஒரு நைசைத் தீர்வையை முற்றானதாக்குகின்ற கட்டளையொன்றினால்;

(ஆ) எதிராளி பிணைப்பொறுப்பைக் கொடுத்துதவத் தவறியதன்மீது நைசைத் தீர்வையொன்றை முற்றானதாக்கி, 16 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றினால்;

(இ) முற்றான தீர்வையைப் புறத்தொதுக்குவதற்கு எதிராளியினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்து 16 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றினால்; அல்லது

(ஈ) ஒன்றில் நைசைத் தீர்வையைப் பொறுப்புவிடுவித்து அல்லது நைசைத் தீர்வையை முற்றானதாக்கி 17 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட இறுதிக் கட்டளையொன்றினால்,

இன்னலுறும் எவரேனுமாள் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 754 ஆம் பிரிவினது ஏற்பாடுகளின் நியதிகளின்படி மேன் முறையீடொன்றைச் செய்யலாம்.

(2) அத்தகைய ஏதேனும் மேன்முறையீடு செய்யப்படுகின்றமை எவ்வாறிருப்பினும். நிறைவேற்றெழுத்தாணையின் நிறைவேற்றுகை நிறுத்திவைக்கப்படுதலாகாது.

(3) ஒரு முற்றான தீர்வையைப் புறத்தொதுக்குகின்ற மேன்முறையீடொன்றை மேன்முறையீட்டுக்கான நீதிமன்றம் அனுமதிக்குமிடத்தும், இச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் எழுத்தாணையானது ஏலவே நிறைவேற்றப்பட்டுள்ளவிடத்தும், மேன்முறையீட்டுக்கான நீதிமன்றம், குத்தகையின் செல்லுபடிக் காலப்பகுதியின்போது மேன்முறையீட்டாளரின் இருப்பாட்சிக்காக அல்லது தொழிலுக்காக வளவுகள் இழக்கப்பட்டமைக்குத் தோதானதென அது கருதக்கூடிய வாறான அத்தகைய பணத்தொகையிலான சேதவீடுகளை அளித்து அவரின் சார்பாகத் தீர்வையொன்றைப் பதிதல் வேண்டும் என்பதுடன் அதன் தற்றுணிபின்படி, வளவுகளின் வெற்றுடைமையை மேன்முறையீட்டாளர் மீளப்பெறுவதற்கும் கட்டளையிடலாம்:

ஆயின், எவ்வாறாயினும், மேன்முறையீட்டுக்கான நீதிமன்றம், மேன்முறையீட்டுக்கான நீதிமன்றத்தின் தீர்ப்புத் தேதியன்றுள்ள வாறாகக் குத்தகை உடன்படிக்கையின்கீழ் வளவுகள் எக்குத்தகைக் காலப்பகுதிக்கு மேன்முறையீட்டாளருக்குக் கொடுக்கப்பட்டதோ அக்குத்தகைக் காலப்பகுதி ஏலவே முடிவுற்றிருந்தால், வளவுகளை மேன்முறையீட்டாளர் மீளப்பெறுவதற்குக் கட்டளையிடுதலாகாது.

(4) நைசைத் தீர்வையொன்றை முற்றானதாகப் பதிவதற்கு மேன்முறையீட்டுக்கான நீதிமன்றம் கட்டளையொன்றை ஆக்குமிடத்து, அத்தகைய தீர்வையானது, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 225 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினதும் 323 ஆம் பிரிவினதும் நியதிகளின்படி பிசுக்காலுக்கு முறையாக வழங்கப்பட்ட நிறைவேற்றெழுத்தாணையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும், ஆனால் அதன் நிறைவேற்றுகையானது, உயர்நீதிமன்றத்துக்குத் தோதான விண்ணப்பமொன்றைச் செய்வதற்குச் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட காலப்பகுதி முடிவுறும்வரை நிறுத்திவைக்கப்படுதல் வேண்டும்.

(5) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், நிறைவேற்றுகையை நிறுத்திவைக்கின்ற வெளிப்படையான கட்டளையொன்றை உயர்நீதிமன்றம் ஆக்கினாலொழிய, உயர்நீதிமன்றத்துக்கான விண்ணப்பமொன்றைச் செய்வதற்காகச் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட காலப்பகுதிக்குப்பின்னர் எழுத்தாணை நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

பாகம் VII

## நானாவித ஏற்பாடுகள்

*ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள்*

**26**. இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்படாத நடவடிக்கைமுறை பற்றிய ஏதேனும் கருமத்தில் அல்லது கேள்வியில், அதேபோன்ற கருமம் அல்லது கேள்வி தொடர்பில் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் விதிக்கப்பட்ட நடவடிக்கைமுறை, அத்தகைய நடவடிக்கைமுறை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாததாக விராதிருப்பின், நீதிமன்றத்தினால் பின்பற்றப்படுதல் வேண்டும்.

*படிவங்கள்*

**27**. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய ஏதேனும் படிவம் இச்சட்டத்திற் குறித்துரைக்கப்பட்டிராதவிடத்து, தேவைப்படக்கூடியவாறான அத்தகைய படிவம், அத்தகைய நோக்கத்துக்காக அமைச்சரினால் விதித்துரைக்கப்படலாம்.

*தீர்வை நிறைவேற்றப்படும் நேரத்திலுள்ளவாறு வருமதியாகவுள்ள தீர்த்துவைக்கப்படாத பயன்பாட்டுச் சிட்டைகளை அல்லது சேவை விதிப்பனவுகளை அறவிடுதல்*

**28**. (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்டவொரு வழக்கில், பிராதின் தேதியிலிருந்து நிறைவேற்றெழுத்தாணைத் தேதிவரை, எதிராளி, சேவை விதிப்பனவு அல்லது அதன் பாகம் அல்லது எவையேனும் பயன்பாட்டுச் சிட்டைகள் அல்லது அவற்றின் பாகம் என்றவகையாகக் குத்தகை உடன்படிக்கையின்கீழ் அவரிடமிருந்து வருமதியாகவுள்ளதும் அவரினாற் செலுத்தப்படற்பாலதுமான ஏதேனும் கொடுப்பனவைத் தீர்த்துவைப்பதில் தவறுகை புரிந்திருந்தால், வழக்காளி, அத்தகைய வருமதிகளையும் வட்டியையும் அத்தகைய வருமதிகள்மீது விதிக்கப்பட்ட தண்டத்தையும் அறவிடுவதற்காக, அத்தகைய தீர்த்துவைக்காமையை நிலைநாட்டுவதற்கு இயைபான ஆவணமுறையான சான்றினால் ஆதாரப்படுத்தப்பட்ட மனு மற்றும் சத்தியக்கடுதாசிமூலம், எழுத்தாணை நிறைவேற்றப்பட்ட மற்றும் வழக்காளிக்கு வளவுகளின் வெற்றுடைமை ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றுமாதக்காலப் பகுதியொன்றினுள் அதேவழக்கில் விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட மனு, சத்தியக் கடுதாசி மற்றும் ஆவணமுறையான சான்றில் அடங்கியுள்ள உள்ளீடுகள்பற்றி நீதிமன்றம் திருப்திப்படுவதன்மீது, தோன்றுவதற்கும், குறித்துரைக்கப்பட்ட அத்தகைய பணத்தொகையை வழக்காளிக்குச் செலுத்துவதற்கு நீதிமன்றம் ஏன் கட்டளையொன்றை ஆக்குதலாகாதெனக் காரணங்காட்டுவதற்கும் எதிராளியைப் பணிக்கின்ற கட்டளையொன்றை ஆக்கலாம்.

(3) நீதிமன்றம், உரிய விசாரணையின்பின்னர், வழக்காளிக்கு வளவுகளின் வெற்றுடைமை ஒப்படைக்கப்படும் தேதிவரை அத்தகைய எவையேனும் பயன்பாட்டுச் சிட்டைகளினதும் சேவை விதிப்பனவுகளினதும் நிலுவைகளை, அத்தகைய சிட்டைகளின் அல்லது விதிப்பனவுகளின்மீதான ஏதேனும் வட்டியுடன் அல்லது தண்டத்துடன் சேர்த்து அத்தகைய வழக்காளிக்கு அளிக்கின்ற கட்டளையொன்றை ஆக்கலாம்.

(4) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையிற்றரப்பட்டுள்ள பணத்துக்கான தீர்வைகள் தொடர்பான ஏற்பாடுகள், அத்தகைய கட்டளையில் அளிக்கப்பட்ட பணங்களை அறவிடுவதற்காக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கெதிராக மேன்முறையீடுசெய்வதற்கு உட்கருதுகின்ற எவரேனும் எதிராளி, அத்தகைய மேன்முறையீட்டுக்கான முந்நிபந்தனையொன்றாக, பிணைப்பொறுப்பொன்றான கொடுப்பனவாகக் கட்டளையிடப்பட்ட முழுப் பணத்தொகையையும் நீதிமன்றத்தில் வைப்பிலிடுதல் வேண்டுமென்பதுடன் பிணைபொறுப்பாகக் கட்டளையிடப்பட்ட முழுப் பணத்தொகையையும் வைப்பிலிடாவிடின் அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டை நிராகரிப்பதற்கு நீதிமன்றம் உரித்துடையதுமாகும்.

ஒரு விசேட இடாப்பும் விசேட விசாரணைப் பெயர்ப் பட்டியும் பேணப்படுதல்

**29.** (1) இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகளுக்காக ஒவ்வொரு நீதிமன்றத்திலும் மூன்றாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஒரு விசேட இடாப்பு பேணப்படுதல் வேண்டும். அத்தகைய வழக்குகளுக்கு வேறு வழக்குகளிலிருந்து வேறுபிரித்துக்காட்டும் இலக்கமொன்று குறித்தளிக்கப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் எந்த நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப் படலாமோ அந்த ஒவ்வொரு நீதிமன்றத்திலும், தோன்றுவதற்கும் ஒரு நைசைத் தீர்வைக்கெதிராகக் காரணங்காட்டுவதற்குமான அனுமதி எந்த வழக்குகளில் வழங்கப்பட்டுள்ளதோ அந்த வழக்குகள் பற்றிய விசேட விசாரணைப் பெயர்ப்பட்டியொன்று வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நீதிமன்றத்தின் ஏதேனும் விதியில் அல்லது செய்முறையில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய வழக்குகளின் வெள்ளெனவான கையாளுகையை வசதிப்படுத்தக்கூடியவாறான அத்தகைய நாட்களில் மற்றும் விசாரணைத் தேதி பற்றிய நியாயமான அறிவித்தலைத் திறத்தவர்களுக்குக் கொடுத்த பின்னர் அத்தகைய வழக்குகளைக் கேட்புக்கு நிர்ணயிக்கும்படி கட்டளையிடுவது அத்தகைய நீதிமன்ற நீதிபதிக்குத் தகுதிவாய்ந்ததாதலும் வேண்டும்.

## பாகம் VIII

## பொது ஏற்பாடுகள்

**30.** குத்தகை உடன்படிக்கைகள் தொடர்பாக வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள், அவை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு, இச்சட்டத்தினால் ஆளப்பட்ட குத்தகை உடன்படிக்கைகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*ஏனைய சட்டங்களின் ஏற்புடைமை*

**31.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டம் தொடங்கும் தேதிக்குமுன்னர் ஏதேனும் குத்தகை உடன்படிக்கை செய்துகொள் ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளமை எவ்வாறிருப்பினும், அத்தகைய குத்தகை உடன்படிக்கைக்கு ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

*இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் நிறைவேற்றப் பட்ட குத்தகை உடன்படிக்கை களுக்கு இச்சட்டம் ஏற்புடைய தாதல்*

(2) அத்தகைய குத்தகை உடன்படிக்கை இச்சட்டம் தொடங்கும் தேதிக்குமுன்னர் முடிவுற்றிருக்குமிடத்து அல்லது முடிவுறுத்தப் பட்டிருக்குமிடத்து, குத்தகைகொடுநர் குத்தகைபெறுநருடன் புதிய குத்தகை உடன்படிக்கையொன்றைச் செய்திராதிருந்தாலொழிய, இச்சட்டத்தின்கீழ் வளவுகளின் உடைமையையும் குத்தகை வாடகை

கள், சேவை விதிப்பனவுகள் மற்றும் ஒழித்துக்கட்டப்பட்ட சேதவீடுகளின் நிலுவைகளையும் அறவிடுவதற்காக இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து வழக்குநடவடிக்கைகளைத் தொடங்குவதற்குக் குத்தகைகொடுநர் உரித்துடையவராதல் வேண்டும்.

*இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவுறாதுள்ள வழக்குகள்*

**32.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், வளவுகளின் உடைமையை மீளப்பெறுவதற்கான வழக்கொன்றைக் குத்தகைகொடுநர் ஒருவர் தொடுத்துள்ளவிடத்தும், அத்தகைய வழக்கு இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவுறாதுள்ளவிடத்தும், அத்தகைய குத்தகைகொடுநர், அத்தகைய வளவுகளின் உடைமையை மீளப்பெறுவதற்கும் ஏனைய நிவாரணங்களுக்கும் இச்சட்டம் தொடங்கியபின்னர் இச்சட்டத்தின்கீழ் வழக்கொன்றைத் தொடுப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஓராண்டினுள் கோப்பிடப்படுதல் வேண்டும்.

*ஏனைய பரிகாரங்களைப் பேணல்*

**33.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள், ஒரு குத்தகை உடன்படிக்கையின்கீழ் குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் குத்தகைகொடுநர் ஒருவருக்கு, அத்தகைய வளவுகளின் உடைமையை மீளப்பெறுவதற்காக அல்லது அத்தகைய குத்தகை உடன்படிக்கையின்கீழ் குத்தகைபெறுநரிடமிருந்து ஏதேனும் பணத்தை, சேதவீடுகளை, பயன்பாட்டுச் சிட்டைகளை அல்லது வேறு கொடுப்பனவுகளை அறவிடுவதற்காகச் சட்டத்தில் கிடைக்கக்கூடியதாக இருக்கக்கூடிய வேறேதேனும் பரிகாரத்துக்கு மேலதிகமானவையாகவிருத்தல் வேண்டும்; அதனை மதிப்புக்குறைப்பனவாகவல்ல.

*வாடகைச் சட்டம் ஏற்புடையதாகாமை*

**34.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் நிறைவேற்றப்பட்டவொரு குத்தகை உடன்படிக்கைக்கு, அல்லது அது தொடர்பாக, 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வாடகைச் சட்டத்திலுள்ளதெதுவும் ஏற்புடையதாதலாகாது.

(2) இச்சட்டத்தின்கீழ் வழக்கொன்றைத் தொடுப்பதிலிருந்து 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வாடகைச் சட்டத்தின் 29 ஆம் பிரிவில் அடங்கியுள்ளதெதுவும் எவரேனுமாளைத் தடைசெய்தலாகாது.

**சட்டப் பிரதிநிதி ஒரு திறத்தவராக்கப் படுவதன் பயன்**

**35.** குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின்கீழ் ஒரு திறத்தவருக்குப் பதிலீடாக அவரது சட்டப் பிரதிநிதியாக ஏதேனும் நியமனம் செய்யப்படுமிடத்து, அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள் வழக்குக்கான திறத்தவரொருவராகக் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன் இறந்துபோன குத்தகை பெறுநருக்குக் குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதலும் சேதவீடுகளை அறவிடுதலும் உட்பட, இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்கில் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும், நைசைத் தீர்வையும் அல்லது முற்றான தீர்வையும் அல்லது செய்யப்பட்ட எதுவும் அத்தகைய பதிலீடுசெய்யப்பட்ட திறத்தவருக்கெதிராக வலுவுறுத்தப்படற்பாலதாதலும் வேண்டும்.

**ஆட்கள் குழுவொன்றினாலான தவறுகள்**

**36.** இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஓர் ஆட்கள் குழுவினாற் புரியப்படுமிடத்து, அப்போது-

(அ) அவ்வாட்கள் குழு ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக விருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும் அல்லது செயலாளரும்;

(ஆ) அவ்வாட்கள் குழு ஒரு குழுமமாகவிருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்; அத்துடன்

(இ) அவ்வாட்கள் குழு ஒரு கூட்டிணைக்கப்படாத குழுவாக விருப்பின், அத்தகைய கூட்டிணைக்கப்படாத குழுவின் உறுப்பினராகவுள்ள ஒவ்வொரு தனியாளும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எவரேனும் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது செயலாளர் அல்லது அத்தகைய குழுமத்தின் எவரேனும் பங்காளர் அல்லது அத்தகைய கூட்டிணைக்கப்படாத குழுவிலுள்ள எவரேனும் தனியாள், அத்தவறு தான் அறியாமல் புரியப்பட்டதென்று அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்குத் தான் உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தாரென எண்பித்தால், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

ஒழுங்கு விதிகள்

**37.** (1) அமைச்சர், இச்சட்டத்தின் நெறிகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக, விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது இச்சட்டத்தின்கீழ் எந்தக் கருமம் தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று, அல்லது அவ்வொழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) (அ) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(ஆ) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முறையாகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒழுங்குவிதியொன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்

**38.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

''மேன்முறையீட்டுக்கான நீதிமன்றம்'' என்பது, மாவட்ட நீதிமன்றத்தின் கட்டளைகள் அல்லது தீர்ப்புகள்மீது குடியியல் மேன்முறையீட்டு, மீளாய்வுசார் அல்லது முன்னிலை மீட்பு நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கின்ற ஏதேனும் நீதிமன்றம் என்று பொருளாகும்;

“குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை” என்பது, (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை என்று பொருளாகும்;

“நீதிமன்றம்” என்பது, நியாயாதிக்கங்கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றம் என்று பொருளாகும்;

“குத்தகை உடன்படிக்கை” என்பது, (70 ஆம் அத்தியாயமான) மோசடிகளைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி முறையாக நிறைவேற்றப் பட்டதும் வளவுகளின் குத்தகை கொடுநரையும் குத்தகைபெறுநரொருவரையும் சம்பந்தப்படுத்துகின்ற தும் அதற்கான முத்திரைத் தீர்வை முறையாகச் செலுத்தப்பட்டுள்ளதுமான ஏதேனும் உடன்படிக்கை அல்லது 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் முறையாக நிறைவேற்றப்பட்டவொரு குத்தகைச் சாதனம் என்று பொருளாகும்;

“சட்டப்படியான வட்டி” என்பது, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 192 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பணச்சபையினால் தீர்மானிக்கப்பட்டு வெளியிடப்பட்டவாறான வீதத்தில் கணக்கிடப்பட்ட வட்டி என்று பொருளாகும்;

“குத்தகைபெறுநர்” என்பது, அப்போதைக்கு வலுவிலுள்ளதும், ஒரு பிரசித்த நொத்தாரிசுவின்முன்னர் முறையாக நிறைவேற்றப்பட்டதுமானவொரு சாதனம் என்றவகை யாக வளவுகளின் உடைமைக்கான உரிமையைக் கொள்கின்ற ஆள் ஒருவர் என்று பொருளாகும் என்பதுடன் அவர் இறக்கும் பட்சத்தில், அவரது மரபுரிமையாளர்கள், நிறைவேற்றுநர், நிருவாகி அல்லது சட்டப் பிரதிநிதி என்போரையும் உள்ளடக்கும்;

“குத்தகைகொடுநர்” என்பது, அப்போதைக்கு வலுவிலுள்ளதும், ஒரு பிரசித்த நொத்தாரிசுவின் முன்னர் முறையாக நிறைவேற்றப்பட்டதுமானவொரு சாதனம் என்றவகையாக வளவுகளின் உடைமைக்கான உரிமையைக் கைமாற்றுகின்ற ஆள் ஒருவர் என்று பொருளாகும் என்பதுடன் அவர் இறக்கும் பட்சத்தில், அவரது மரபுரிமையாளர்கள், நிறைவேற்றுநர், நிருவாகி அல்லது சட்டப் பிரதிநிதி என்போரையும் உள்ளடக்கும்;

‘‘அவரது சார்பில் மற்றைய ஆள்’’ என்பது, வழக்கின் விடயப்பொருளாகவுள்ள வளவுகளுக்குப் பொறுப்பானவரான எதிராளியின் எவரேனும் முகவரை உள்ளடக்கும்;

“உடைமை” என்பது, வளவுகளின் உருப்படியான இருப்பாட்சியிலிருத்தலை அல்லது வளவுகளின் திறப்புகளை வைத்திருத்தலை உள்ளடக்கும்;

‘‘வளவுகள்’’ என்பது, ஏதேனும் கட்டிடத்துடன் அல்லது கட்டிடத்தின் பாகத்துடன் இணைந்துள்ள காணியுடன் சேர்த்து அந்த ஏதேனும் கட்டிடம் அல்லது கட்டிடத்தின் பாகம் என்று பொருளாகும் என்பதுடன் ஒரு கட்டிடமில்லாத வெற்றுக்காணியையும் அல்லது பல்மாடிக் கட்டிடத்தின் ஒரு பாகத்தையும் உள்ளடக்கும்;

“தனியார் மன்றாணை சேர்ப்பிப்பவர்” என்பது, ஒரு சட்டத்தரணியினால் அல்லது ஏதேனும் நிறுவனத்தினால் தொழிலுக்கமர்த்தப்பட்டவரும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் நீதிமன்றப் பிசுக்காலினால் தனியார் மன்றாணை சேர்ப்பிப்பவராகப் பதிவுசெய்யப்படுகின்றவருமான ஆளொருவர் என்று பொருளாகும்;

“மன்றாணை அலுவலர்” என்பது-

(அ) எந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினது இடப்பிரதேச எல்லைகளினுள் நைசைத் தீர்வை சேர்ப்பிக்கப்படவுள்ளதோ அந்த நீதிமன்றத்தினால் குறித்தளிக்கப்பட்ட பிசுக்கால்;

(ஆ) நைசைத் தீர்வையைச் சேர்ப்பிப்பதற்கு நீதிமன்றத்தினால் விசேட சூழ்நிலைகளில் விசேடமான முறையில் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலர்;

(இ) கிராம அலுவலர்; அல்லது

(ஈ) தனியார் மன்றாணை சேர்ப்பிப்பவரொருவர்,

என்று பொருளாகும்;

“பகிரங்க அலுவலர்” என்பது, அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரையிலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

“சேவை விதிப்பனவு” என்பது, 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் கீழ் ஒரு கூட்டாட்சியாதனக் கூறு தொடர்பாகத் தாபிக்கப்பட்ட முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கு அத்தகைய கூட்டாட்சியாதனக் கூறின் சொந்தக்காரரினால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் சேவை விதிப்பனவு அல்லது முகாமைக் கட்டணம் அல்லது ஆதனமொன்று ஒரு முகாமைக் கம்பெனியினால் அல்லது சங்கத்தினால் முகாமை செய்யப்பட்ட ஏதேனும் ஆதனக் கட்டிடத் தொகுதியினுள் அமைந்துள்ளவிடத்தும் அத்தகைய சேவை விதிப்பனவு குத்தகைகொடுநருக்கும் குத்தகைபெறுநருக்கும் இடையேயான இயைபான உடன்படிக்கையின்கீழ் குத்தகைபெறுநரினால் செலுத்தப்படற்பாலதாகவிருக்குமிடத்தும் அத்தகைய ஆதனத்தின் சொந்தக்காரரினால் அத்தகைய கம்பெனிக்கு அல்லது சங்கத்துக்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் சேவை விதிப்பனவு அல்லது முகாமைக் கட்டணம் என்று பொருளாகும்.

**39**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

## முதலாம் அட்டவணை

(பிரிவு 5)

நைசைத் தீர்வையின் படிவம்

(தலைப்பு)

20........... ஆம் ஆண்டு ............... மாதம் ................... ஆந் நாளன்று இவ்வழக்கு ........................ அவர்கள் முன்னர் (நீதிபதியின் பெயரும் பதவியும்) கையாளுகைக்காக வந்து, பிராதையும் ஆவணங்களையும் வாசித்தபின்னரும் .................. என்பவரின் (வழக்காளியின் பெயர்) ............................. ஆந் தேதியிடப்பட்ட சத்தியக்கடுதாசியில் அடங்கியுள்ள உறுதிக்கூற்றுக்கள் பற்றித் திருப்திப்படுவதன் மீதும், பின்வருமாறு கட்டளையிடப்பட்டுத் தீர்வை பதியப்படுகின்றது:-

(அ) ................... என்பவரும் (எதிராளியின் பெயர்), அவரது சேவையாளர்களும், முகவர்களும், அவரின்கீழ் இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட வளவுகளின் உடைமையை வைத்திருப்பவர்களுமான எல்லோரும் வளவுகளிலிருந்து வெளியேற்றப்படுதல் வேண்டுமென்றும்;

(ஆ) (i) மேலே பெயர்குறிப்பிடப்பட்ட எதிராளி, மேலே பெயர்குறிப்பிடப்பட்ட வழக்காளிக்கு, பிராதில் இறைஞ்சிக்கேட்கப்பட்ட குத்தகை வாடகையின் நிலுவைகளாகவுள்ள ........................ ரூபா பணத்தொகையைச் செலுத்தவேண்டுமென்றும், (ஏற்புடையதாயின்);

(ii) மேலே பெயர்குறிப்பிடப்பட்ட எதிராளி, மேலே பெயர்குறிப்பிடப்பட்ட வழக்காளிக்கு, இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட வளவுகளின் வெற்றுடைமை மேலே பெயர்குறிப்பிடப்பட்ட வழக்காளியினால் மீளப்பெறப்படும்வரை .................. ஆந் தேதிவரை வருமதியான சேவை விதிப்பனவின் நிலுவைகளாகவுள்ள ................................ ரூபா பணத்தொகையையும் ................ ஆந் தேதியிலிருந்து மாதமொன்றுக்கு ............... ரூபா என்ற வீதத்தில் மேலதிகச் சேவை விதிப்பனவையும் செலுத்தவேண்டுமென்றும், (ஏற்புடையதாயின்);

(iii) மேலே பெயர்குறிப்பிடப்பட்ட எதிராளி, மேலே பெயர்குறிப்பிடப்பட்ட வழக்காளிக்கு, மேலே பெயர்குறிப்பிடப்பட்ட வழக்காளி இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட வளவுகளின் வெற்று மற்றும் அமைதியான உடைமையை மீளப்பெறப்படும்வரை ............................ ஆந் தேதியிலிருந்து மாதமொன்றுக்கு/காலாண்டொன்றுக்கு/ ஆண்டொன்றுக்கு .................. ரூபா வீதத்திலான ஒழித்துக்கட்டப்பட்ட சேதவீடுகளாகவுள்ள .......................... ரூபா பணத்தொகையைச் செலுத்தவேண்டு மென்றும், (ஏற்புடையதாயின்),

## குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல்

மற்றும் வழக்கின் செலவுதொகைகளுடன் சேர்த்து முழுக்கொடுப்பனவும் செய்யப்படும்வரை ................................ ஆந் தேதியிலிருந்து அத்தகைய பணதொகைகளின்மீது சட்டப்படியான வீதத்திலான வட்டியும்.

ஆதலால் இவை, இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட வளவுகளினுட் பிரவேசிப்பதற்கும் அதனை உடைமைகொள்வதற்கும், இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட வளவுகளிலிருந்து மேலே பெயர்குறிப்பிடப்பட்ட எதிராளியையும், அவரது சேவையாளர்களையும், முகவர்களையும், அவரின்கீழ் வைத்திருக்கின்ற எல்லோரையும் வெளியேற்றுவதற்கும், வழக்காளிக்கு அல்லது வழக்காளியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு வெற்றுடைமையை ஒப்படைப்பதற்கும் மற்றும் நீதிமன்றத்தின் இத்தீர்வைமூலம் சொல்லப்பட்ட எதிராளிக்கெதிராக மேலே பெயர்குறிப்பிடப்பட்ட வழக்காளி அறவிடவேண்டிய மேலே குறிப்பிடப்பட்ட பணத்தொகைகளை மேற்குறிப்பிடப்பட்ட எதிராளியின் வீடுகள், காணிகள், பண்டங்கள், தனிசுகள் மற்றும் வரவுகளைக் கைப்பற்றி அவசியமாயின் அவற்றை விற்பனைசெய்வதன்மூலம் அறவிடுவதற்கும் ஆக்குவதற்கும், இந்த நைசைத் தீர்வை முற்றானதாக்கப்படுவதிலிருந்து .................. நாட்களினுள் அப்பணத்தை நீதிமன்றத்தின்முன்னர் இடுவதற்கும், .................. மாகாணத்தின் பிசுக்கால் எப்பணத்தொகைக்காக அல்லது பணத்தொகைகளுக்காக மற்றும் எவ்வாளுக்கு அல்லது ஆட்களுக்கு முறையே ஆதனத்தை விற்பனை செய்துள்ளாரென இந்நீதிமன்றத்துக்கு அறிவிப்பதற்கும் .................. மாகாணத்தின் பிசுக்காலுக்கு ஆணையிடுவதுடன் இந்த நைசைத் தீர்வை முற்றானதாக்கப்படும்போது, அத்தகைய நோக்கத்துக்காக ஒரு பணிப்பாணையாகப் பயன்படுதலும் வேண்டும்.

மேலே பெயர்குறிப்பிடப்பட்ட எதிராளி 20......... ஆம் ஆண்டு ................ மாதம் ............ ஆந் நாளன்று .................. மணிக்கு (நேரம்) இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றுதல் வேண்டுமென்பதுடன் தோன்றுவதற்கும், இந்த நைசைத் தீர்வை ஏன் முற்றான தாக்கப்படுதலாகாதெனக் காரணம் ஏதேனுமிருப்பின் அதனைக் காட்டுவதற்கும் நீதிமன்றத்திடமிருந்து அனுமதி நாடுகின்ற விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டுமென்று மேலும் கட்டளையிடப்படுகின்றது. தோன்றுவதற்கும் காரணங்காட்டுவதற்கும் அவ்வாறு அனுமதி வழங்கப்படுமிடத்தும் மற்றும் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப் பட்டவாறாகப் போதிய பிணைப்பொறுப்பு வைப்பிலிடப்படுமிடத்தும், சொல்லப்பட்ட எதிராளி நைசைத் தீர்வைக்கெதிராகக் காரணங்காட்டுவதற்கு அனுமதிக்கப்படுகின்றார். எவ்வாறாயினும், விண்ணப்பமெதுவும் செய்யப்படா விடின் அல்லது விண்ணப்பமொன்று செய்யப்பட்டு, குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, தோன்றுவதற்கும் காரணங்காட்டுவதற்குமான அனுமதி வழங்கப்படாதவிடத்து, நைசைத் தீர்வை சொல்லப்பட்ட எதிராளிக்கெதிராக முற்றானதாக்கப்படுதல் வேண்டும்.

<u>மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட வளவுகளின் அட்டவணை</u>

(கையொப்பமிடப்பட்டது) ............................
(நீதிபதியின் பெயரும் பதவியும்)

20 ............. ஆம் ஆண்டு ......... மாதம் ............ ஆந் நாளாகிய இன்று.

**இரண்டாம் அட்டவணை**

(பிரிவு 9 (2) மற்றும் 9(5))

நைசைத் தீர்வையைச் சேர்ப்பிப்பதற்கு ஒரு மன்றாணை அலுவலருக்கான/பிசுக் காலுக்கான/ கிராம அலுவலருக்கான/தனியார் மன்றாணை சேர்ப்பிப்பவருக் கான கட்டளைப் படிவம்

(தலைப்பு.)

................... இன் பிசுக்காலுக்கு/கிராம அலுவலருக்கு,
தனியார் மன்றாணை சேர்ப்பிப்பவருக்கு,
................... இன் ................... நீதிமன்றம்,

நைசைத் தீர்வையின் இணைப்பிரதிகளுடன் இத்தால் உங்களுக்கு அனுப்பப்படும் மேலே பெயர்குறிப்பிடப்பட்ட வழக்கிலான நைசைத் தீர்வையை, அது நெறிப்படுத்தப்பட்ட ஆட்களுள் ஒவ்வொருவருக்கும் உடனடியாகச் சேர்ப்பித்து, இணைப்பிரதி நைசைத் தீர்வையொன்றையும் நைசைத் தீர்வையுடன் சேர்த்தனுப்பப்படும் பிராதின் பிரதிகளுள் ஒன்றையும் அத்தகைய ஒவ்வோராளுடனும் விட்டுவைக்கவும் அல்லது அவருக்கு அளிக்கவும்.

எதிராளிக்கு அல்லது அவரது சார்பில் வேறெவரேனுமாளுக்கு நைசைத் தீர்வையைச் சேர்ப்பிக்கும்போது, மூலக்கட்டளையின்மீது தீர்வை சேர்ப்பிக்கப்பட்டமைக்கு ஒப்புதலாக அத்தகைய எதிராளியின் அல்லது அத்தகைய ஆளின் கையொப்பத்தை அல்லது கைப்பெருவிரலடையாளத்தை அல்லது இரண்டையும் பெற்றுக்கொள்வதற்கு முயற்சித்தல் உங்கள் கடமையாதல் வேண்டும்.

உரிய விழிப்புக்கவனத்தைப் பிரயோகிக்கையில் நீங்கள் நைசைத் தீர்வையைச் சேர்ப்பிக்க இயலாதவராகவிருப்பின், நீதிமன்றத்தின் ஏதேனும் மேற்கொண்ட பணிப்பின்றி, பிராதின் அட்டவணையில் கொடுக்கப்பட்ட வழக்கின் விடயப்பொருளாகவுள்ள வளவுகளின் ஏதேனும் துலாம்பரமான பாகத்தில் நைசைத் தீர்வையை ஒட்டிவிடுவதற்கு நீங்கள் இத்தால் அதிகார மளிக்கப்படுகின்றீர்கள் என்பதுடன் அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும் துடர்ச்சியிலான வளவுகளில் ஒரு துலாம்பரமான இடத்தில் நைசைத் தீர்வையை ஒட்டிவிட்டதன்மூலம் நைசைத் தீர்வையை நீங்கள் சேர்ப்பித்தீர்க ளென நீங்கள் நீதிமன்றத்துக்கு அறிக்கையிடுதலும் வேண்டும்.

எவ்வாளுக்கு நைசைத் தீர்வை சேர்ப்பிக்கப்பட்டதோ அது தொடர்பான முறை, ஆள், இடம் மற்றும் அவ்வாளின் ஆளடையாளம் பற்றிய வேறு விபரங்களையும், நைசைத் தீர்வை சேர்ப்பிக்கப்பட்ட தேதியையும், நேரத்தையும் விரிவாக எடுத்துக்கூறி ஓர் அறிக்கை என்றவகையாக இதன் தேதியிலிருந்து பத்து (10) நாட்களினுள் இந்நீதிமன்றத்துக்குச் சான்றுப்படுத்தும்படியும், அது எவ்வாளுக்குச் சேர்ப்பிக்கப்பட்டதோ அவ்வாள் அவரது கையொப்பத்தை அல்லது கைப்பெருவிரலடையாளத்தை மூலக்கட்டளையில் இட்டாரா அல்லது கையொப்பத்தை அல்லது கைப்பெருவிரலடையாளத்தை அல்லது இரண்டையும்

இடுவதற்கு மறுத்தாரா என்பதை அவ்வறிக்கையில் குறிப்பிடும்படியும், காண்பிபொருளொன்றாக மூலக்கட்டளையை உங்கள் சான்றிதழுடன் இணைக்கும்படியும் நீங்கள் இத்தால் பணிக்கப்படுகின்றீர்கள்.

நீதிமன்றத்தின் கட்டளைப்படி,

(கையொப்பமிடப்பட்டது) ...............
பதிவாளர்,
...................... மாவட்ட நீதிமன்றம்.

20 ............ ஆம் ஆண்டு ......... மாதம் ........... ஆந் நாளாகிய இன்று.

**மூன்றாம் அட்டவணை**

(பிரிவு 29)

இடாப்பின் படிவம்

| வழக்கில. | வழக்காளியின் பெயர் | எதிராளியின் பெயர் | துடர்ச்சியிலுள்ள வளவுகள் | நைசைத் தீர்வைத் தேதி | முற்றான தீர்வை/ பொறுப்பு விடுவிப்புத் தேதி | தீர்வை திருப்தி செய்யப் பட்ட தேதி | வேறேதேனும் கருமம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |